# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 253/மா/2017

ஆணை எண். 288/2017

நாள் : 19/12/2017

திரு V. ஜெயராமன்,
சென்னை – 75. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் – 1,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, 4, அண்ணா நகர், எல்.ஐ.சி. காலனி, 7–வது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு V. ஜெயராமன் என்பவர், திருவொற்றியூர் நகராட்சியில் துப்புரவு பணி மேலாளராகப் பணிபுரிந்து 30.06.2006 அன்று பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளார். அவர் தனது சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப் படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முறையீட்டு மனுதாரர் 70 அகவையினைக் கடந்த மூத்த குடிமகன். மனுதாரரின் கோரிக்கைக் குறித்து சிறப்பு கவனம் செலுத்தி சேமநல நிதிக்கான வட்டித் தொகையை வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. உதவி ஆணையர்,
மண்டலம் .1,
எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 019 (இணைப்புடன்).

2. திரு V. ஜெயராமன்,
4, அண்ணா நகர்,
7–வது குறுக்குத் தெரு,
சென்னை – 600 075.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்